**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 164/2022**

**வாதி தரப்பு சாட்சி–2 பிரசாத் – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 25.09.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரசாத் | கிராமம் | |
| த/பெ / க/பெ. | வாசுதுரை | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 47 |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

| | | |
|---|---|---|
| 1. | எனது ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பீட்டு பார்க்கப்பட்டது | வா.சா.ஆ.7 |

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) நான் திருச்சி மாவட்டம், புங்கனூரில் வசிக்கிறேன் என்றால் சரிதான். வாதியும் புங்கனூரில் வசிக்கிறாரா என்றால் இல்லை. புங்கனூர் என்பது தாயானூர் கிராமம் என்றால் சரிதான். நானும், வாதியும், புங்கனூர் கிராமத்தில் தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். 6,7 கி.மீ தொலைவில் வசிக்கிறார். வாதி குமரன் என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் வழக்கறிஞர் தொழில் செய்து வருகிறார். வாதியை எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் சுமார் 4 வருடங்களாக தெரியும். எனது பூர்வீகம் புங்கனூர் என்றால் சரிதான். இவ்வழக்கு எந்த சொத்தை பொறுத்து யாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கில் நான் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் விபரங்கள் யார் சொல்லி தெரியும் என்றால் குமரன் சொல்லி தான் தெரியும். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். நான் நேற்று மாலை 4 மணியளவில் தான் சென்னையில் இருந்து வந்தேன். எனது குடும்பம் சென்னையில் வசிக்கிறார்கள். இங்கு எனக்கு வீடு உள்ளது. நேற்று மாலை வழக்கறிஞர் அலுவலகத்தில் எனது சாட்சிய பிராமண வாக்குமூலம் நான் சொல்ல தட்டச்சு செய்யப்பட்டது. அப்போது குமரன் உடன் இருந்தாரா என்றால்

ஆமாம். நான் பிபிஏ படித்துள்ளேன். நான் சென்னையில் ஒப்பந்தத்தின் அடிப்படையில் கட்டிட அலங்கார வேலை செய்கிறேன்.

2) அ.வ.எண்.65/2023 வழக்கு வாதிகளை தெரியுமா என்றால் தெரியும். பீட்டர், தனமேரியை தெரியுமா என்றால் தெரியும். சிவக்குமார், உஷாராணி, அன்பழகன் ஆகியோரை தெரியுமா என்றால் சிவக்குமார், அன்பழகன் தெரியாது. உஷாராணியை தெரியும். குமரனுக்கு உஷாராணி என்ன உறவு என்றால் அது பற்றி தெரியாது. தனசெல்வி, ஆரோக்கிய தீபன் ராஜ், சார்லஸ் ஆகியோர் எதற்காக வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கல்லடை கிராமத்திற்கும், நான் வசிப்பதாக சொல்லும் புங்கனூருக்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் 25 கி.மீ. தொலைவு இருக்கும். கல்லடை கிராமத்தில் எனக்கு இருப்பதாக சொல்லும் சொத்து பூர்வீக சொத்தா அல்லது கிரைய சொத்தா என்றால் எனது தாயார் பெயரில் கிரையம் வாங்கிய சொத்தாகும். எனது சாட்சிய வாக்குமூலத்தில் எனக்கு சொந்தமான சொத்து என நான் சொல்லியுள்ளது தவறு என்றால் சரிதான். எனது தாயாருக்கு பாத்தியப்பட்டது அவர் என்னுடன் தான் இருக்கிறார். எனக்கு பாத்தியப்பட்டதாக சொல்லப்படும் சொத்திற்கு பட்டா, கிரைய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சென்னையில் எவ்வளவு ஆண்டாக வேலை செய்கிறேன் என்றால் சுமார் 1-1/2 வருடமாக வேலை செய்கிறேன். தனியாக அலுவலகம் வைத்துள்ளேனா என்றால் இல்லை.

3) எனது சாட்சிய வாக்குமூலத்தில் சர்வே எண்.113/1ஏ, 113/1பி சொந்தமானது என சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. எனது சாட்சிய வாக்குமூலத்தில் குமரன் யாரிடமிருந்து எவ்வளவு நிலம் கிரையம் வாங்கினார் என்பது பற்றியோ, என்ன சாகுபடி செய்கிறார் என்பது பற்றியோ சொல்லவில்லை என்றால் யாரிடம் வாங்கினார் என தெரியாது. ஆனால் விவசாயம் செய்து வருகிறார். குமரன் விவாசயம் செய்வதுதாக எனது சாட்சிய வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் தவறானது என்றால் சரியல்ல. குமரன் காவல் துறையில் புகார் கொடுத்தாரா என்றால் அது பற்றி தெரியாது. எனது சாட்சிய வாக்குமூலத்தில் சொல்லியுள்ள தேதி தெரியுமா என்றால் 25.11.2022 ஆகும். மேற்படி தேதி எவ்வாறு தெரியும் என்றால் அன்றைய தினம் நான் எனது இடத்தை சுத்தம் செய்து கொண்டு அங்கு தான் இருந்தேன். நான் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானது அன்றைய தேதியில் தாவா சொத்தை குமரன் அனுபவம் செய்து வந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. குமரன் விவசாயம் செய்வதை பிரதிவாதிகள் தடை செய்வதாக நான் சொல்லியுள்ள சங்கதிகள் குமரன் சொல்லி அவருக்கு ஆதரவாக சொல்லியுள்ளேனா என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை குமரன் ஒரு போதும் சாகுபடி செய்யவில்லை என்றும் வழக்கு சொத்தும், இதர சொத்தும் பிரதிவாதிகளின் அனுபவத்தில் தான்

தற்போது வரை இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நானும், குமரனும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் குமரனுக்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**